THIRU K. T. K. TANGAMANI: Sir, on a point of order, I want to make a submission. Last week, you were pleased to tell us that your ruling on the point of order would be given to us. We were waiting for it, but on Saturday, you were not here. We would like to know if you would be giving your ruling today.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நாளைக்குச் சொல்கிறேன்.

(2) அறிக்கை அளித்தல்.

சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் ஆறுவது, ஏழாவது அறிக்கைகள்.

THIRU N. GANAPATHY: Mr. Speaker, Sir, I rise to present the Sixth and Seventh Reports (Fifth Assembly) of the Committee on Delegated Legislation.

(3) நடைமுறைக் கேள்விகள்.

(அ) டில்லியில் நடந்த மாநில முதலமைச்சர்கள், உணவு அமைச்சர்கள் மாநாடு குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஆன் ஏ பாயின்ட் ஆஃப் ஆர்டர். சென்ற இரண்டு தினங்களாக டில்லியிலே மாநில முதலமைச்சர்களின் மாநில உணவு அமைச்சர்களின் மாநாடு நடைபெற்றது. நமது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற உணவுப் பிரச்சினை சம்பந்தமாக ஏற்கெனவே நமது டில்லி சர்க்காரிடத்திலே கூடுதல் உணவு கேட்டுக் கொண்டிருக்கிறோம். நமது மாநிலத்தின் முதலமைச்சரவர்களோ உணவு அமைச்சரோ போய் நமது கோரிக்கையை வலியுறுத்தாததற்கு காரணம் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. முக்கியமான விஷயமாக இருந்தால் உங்கள் தலைவர் பேசுவார். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ற தலைப்பை வைத்துக் கொண்டு உறுப்பினர்கள் எந்த நேரத்திலும் எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று இதைப் பயன்படுத்தினால் அது நல்ல முறையல்ல. இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வராது.

(ஆ) அரிசன நல அமைச்சர் சபைக்குத் தவறான தகவல் அளித்ததாகக் கூறி எழுப்பப்பட்ட பிரச்சினை.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நல அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது 10 ஆண்டுகளில் அரிஜனங்கள் வீட்டு மனைக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் எந்தத் தொகையும் திரும்ப அரசுக்கு வரவில்லை என்றார். நான் அரிசன நலக் குழுவில் இருந்தபோது இப்பேர்ப்பட்ட புகார்கள் வந்தன.